**<u>தனிப்பட்ட தரவு சேகரிப்பின் நோக்கம் சமந்தமான அறிக்கை</u>**
**(மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பு தகவலுக்காக மட்டுமே.)**

தனிப்பட்ட தரவை வழங்குவது தனிச்சையான முடிவாகும். நீங்கள் போதுமான தகவல்களை வழங்கவில்லை என்றால், நீங்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முடியாது.

**தகவல் சேகரிப்பின் நோக்கம்**

1. நீங்கள் வழங்கிய தனிப்பட்ட தரவு பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களுக்காக அரசாங்கத்தால் பயன்படுத்தப்படும்:

(a) COVID-19 தடுப்பூசியைப் பெறுவதற்கான நிலை குறித்து சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளுடன் சரிபார்க்கவும்;

(b) தடுப்பூசி செலுத்தப்படுதலை ஏற்பாடு செய்வதற்கும், தடுப்பூசிக்குப் பின் தொடர் மருத்துவ கண்காணிப்புக்காக தொடர்புடைய அரசாங்க பணியகம் அல்லது துறைகள் மற்றும் அமைப்புகளுக்கு அறிவிக்கவும்;

(c) ஒரு இ-ஹெல்த் (eHealth) (அரசு நல்கைகள்) கணக்கை உருவாக்கவும், செயலாக்கவும், அதை பராமரிக்கவும் பயன்படுத்தப்படும். மேலும் COVID-19 தடுப்பூசி திட்டத்தை நிர்வகிக்கவும் கண்காணிக்கவும் பயன்படுத்தப்படும். ஆனால், அவை மட்டுமல்ல குடிவரவுத் துறையால் வைக்கப்பட்டுள்ள தரவுகளுடன் மின்னணு வழிமுறைகளால் சரிபார்ப்பு நடைமுறையையும் இது உள்ளடக்குகிறது.

(d) COVID-19 தடுப்பூசி திட்டத்தின் கீழ் COVID-19 தடுப்பூசியுடன் தொடர்புடைய பாதுகாப்பு மற்றும் மருத்துவ நிகழ்வுகளை தொடர்ந்து கண்காணிப்பதற்காக சுகாதாரத் துறை மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் (ஹாங்காங் பல்கலைக்கழகம் உட்பட) ஒத்துழைப்புகாக பயன்படுத்தப்படும்;

(e) புள்ளிவிவர மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக;

(f) தொடர்புத் தடமறிதல் உட்பட, COVID-19 நோய்த்தொற்று நிகழ்வு அல்லது பரவுதலைத் தடுப்பது, பாதுகாப்பது, தாமதப்படுத்துவது அல்லது கட்டுப்படுத்துவது; மற்றும்

(g) சட்டபூர்வமான தேவை, அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட ஏதேனும் நியாயமான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும்.

**பரிமாற்றம் பெறுபவர்களின் வகைப்பாடு**

2. நீங்கள் வழங்கிய தனிப்பட்ட தரவு அரசாங்கத்திற்கு பரிமாற்றம் செய்யப்படும், மேலும் தேவைப்பட்டால், மேலே உள்ள பத்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக அரசாங்கத்தால் அதன் முகவர்கள், பிற நிறுவனங்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கும் வெளியிடப்படலாம்.

**தனிப்பட்ட தரவுக்கான அணுகல்**

3. தனிப்பட்ட தரவு (தனியுரிமை) அரசாணையின் (Cap. 486) பிரிவு 18 மற்றும் 22 மற்றும் கொள்கை 6, அட்டவணை 1 ஆகியவற்றின் கீழ் உங்கள் தனிப்பட்ட தரவை அணுகவும் திருத்தவும் கோர உங்களுக்கு உரிமை உண்டு. தரவு அணுகல் கோரிக்கைக்கு இணங்க சுகாதாரத் துறை கட்டணம் விதிக்கலாம்.

**தகவல் வினவுதல்**

4. அணுகல் மற்றும் திருத்தத்திற்கான கோரிக்கை உட்பட வழங்கப்பட்ட தனிப்பட்ட தரவு தொடர்பான வினவலுக்கு, கீழ்கண்ட முகவரி மூலம் தொடர்பு கொள்ளவும்:

Executive Officer (Programme Management and Vaccination Division)

முகவரி: Centre for Health Protection, Block A, 2/F, 147C Argyle Street, Kowloon

தொலைபேசி எண்: 2125 2045

பதிப்பு தேதி: 28 பிப்ரவரி 2022